★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 9உ வியாழன் (22—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 10உ வெள்ளி (23—3—56) [இதழ் 239

பட்டம் தாணுவிற்கு ஆதரவு பெருகுகிறதாம்

மேலும் நான்கு சட்டசபை உறுப்பினர்கள் பட்டம் தாணுப் பிள்ளையை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்களாம். இவர்களைச் சேர்த்தால் 117 பேர் கொண்ட சபையில் தாணு விற்கு 62 பேரின் ஆதரவு கிடைப்பதாயிருக்கும். இவர்க ளின் ஆதரவுக் கடிதங்கள் இராஜப்பிரமுகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய அரசாங்க அலட்சியத்தின் எதிரொலி

75,000 ஆண்-பெண் வீதியில் விரட்டப்படுவர்!

ஐந்தரைக் கோடி ரூ. வருமானத்தை இந்தியப் பேரரசு இழக்கும்

பஞ்சம், பட்டினி, களவு, ஒழுக்கக்கேடு, தொத்துநோய் பரவலாகும்!

சாத்தூர்—சிவகாசி—கோவில்பட்டி பகுதி மக்களைத் தாக்க இருக்கும் பேராபத்து

வடநாட்டைவிட திராவிடத்தின் தொழில்துறை, பின்தங்கிக் கிடக்கிறது. எனவே, தொழில் துறையில் தேய்ந்துகிடக்கும் திராவிடத்திற்கு, இவ்வகையில் சலு கைக் காட்ட வேண்டியது நியாயமாகும்.

சிறப்பான சலுகைக் காட்டப்படவில்லையானாலும், தொழிலினத்தில் திராவிடத்திற்குரிய பங்கையாவது அனு மதித்து வளமாக்க இந்தியப் பேரரசு முனைய வேண்டும்.

ஆனால், இந்தியப் பேரரசின் போக்கோ, உரிய பங்கைப் பெறுவதிலும் திராவிடத்தை வஞ்சிப்பதாகவே இருந்துவருகிறது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

வடநாட்டு ஆதிக்கம் கிடையாதாம்! மக்கள் ஆதிக்கந்தான் இருக்கிறதாம்!

★

"வடநாட்டு ஆதிக்கம் இருப்ப தாகச் சிலர் கூறுகிறார்கள். தமி ழனின் வீரத்தைப் பற்றி பிர மாதமாகப் பேசுகிற இவர்கள் ஏன் வடநாட்டாரைக் கண்டு அஞ்சவேண்டும்? கண்ணகிக்கு சிலை எடுக்க வடநாட்டிலிருந்து கல் சுமந்துவரச் செய்தார்கள் என்றால், அந்த வீரம், தைரியம் எல்லாம் எங்கே போய்விட் டது? காங்கிரசில் வடநாட்டு ஆதிக்கமில்லை; பார்ப்பனர், முதலாளி ஆதிக்கமில்லை; இருப்பது மக்கள் ஆதிக்கம் தான்"

களம்பல கண்ட போராட்டப் புலி எனப் பீத்தல்

கல் சுமக்க வைத்தத் தமிழ் வீரத்தைப் பழிக்கிறார் காமராசர்!

இவ்வாறு, 21-3-56-ல், திருத் துறைப்பூண்டியில், 'கட்டேவு அர்பன் பாங்கி'ல் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 'இராமலிங்கம் ஹால்' (திரு என். ஆர். சாமி யப்பா அவர்களின் குமாரர்) முதல் மைச்சர் காமராசர் திறந்துவைத் துப் பேசுகையில் கூறியுள்ளார்.

குறிப்பு:—கூட்டம் 50 பேர் மட் டுமே கொள்ளக்கூடிய கொண்ட ஹாலில் நடைபெற் றது. வெளியில் சுமார் 100 பேர் நின்றனர்.

கூட்டத்தில் தோழர்கள் என். எஸ். இராமலிங்கமும், என். எஸ். அருணாசலமும் காங்கிரசில் சேர்ந்துவிட்ட செய்தியை பூண்டி கிருஷ்ணசாமி வாண்ட யார் சொன்னார்.

வரும் பொதுத் தேர்தலில், என். எஸ். இராமலிங்கம் அவர்கள் காங்கிரஸ் அபேட்சகராக தேர் தலில் போட்டியிடப் போவதாக உறுதியான செய்திகள் உலவு கின்றன.

அவர் பனங்காட்டு நரியாம்! சலசலப்புக்கு அஞ்சாராம்!

'பல்லிகுளம்' 'பனைமேடு' எனக் கேலி பேசுகிறார் காமராசர்!

"'பல்லிகுளம் போய்விட்டது —பனைமேடு கிடைக்கவில்லை' என்றெல்லாம் சிலர் கூச்சல் போட்டு குழப்பம் விளைவிக்க விரும்புகிறார்கள்; எல்லாம் எங்கே. போய்விட்டது? பெயர்த்து எடுத்துக்கொண்டா போய்விட முடியும்? எல்லாம் அப்படியேதான் இருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

நாக்குப் புரளும் மனிதர்கள் மந்திரிகளாயிருப்பதேன்?

பொதுமக்களிடத்தில் தினம் பேசும் நாம் கோழைகளாம்!

சென்னையைத் 'தமிழ்நாடு' என்று அழைப்பதில் காமராசருக்கு என்ன நஷ்டம்?

சென்னையில் பொதுச்செயலாளர் இலட்சிய முழக்கம்

"நாம் பல ஆண்டுகளாக எடுத்துச்சொல்லி வருகிறோம்—தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் இந்நான்கு மாநிலங் களும் மொழிவழி பிரிந்து, இனவழி ஒன்றுபட்டு, வடநாட்டு எதிர்ப்புவழி ஒன்றுபட்டு, இந்தி எதிர்ப்புவழி ஒன்றுபட்டு, சுரண்டல் தடுப்புவழி ஒன்றுபட்டு, வர்த்தகவழி ஒன்றுபட்டு, ஒரு சுதந்திர சோஷலிச திராவிடக் கூட்டாட்சி அமைக்க வேண்டுமென்று கூறிவருகிறோம்.

"எந்தக் காரணங்களை வைத்து நாம் 'திராவிட நாடு' கேட்டோமோ, அதே முறையில்தான் இன்று 'தட்சிணப் பிர தேசம்' வேண்டுமென்று கேட்கிறார்கள்; அன்று நம் கருத்துக் களை மறுத்தவர்கள் இன்று ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் 'தட்சிணப் பிரதேசம்' இந்தியாவுடன் இணைந்தி ருக்க வேண்டுமென்கின்றனர். நாம் கேட்கும் 'திராவிடம்' ஒரு தனி நாடாக—இந்திய ஆட்சிக்குட்படாத நாடாக இருக்க வேண்டுமென்கிறோம்

"இந்தியாவுடன் 'திராவிட நாடு' ஒன்றாக இணைந்திருக்கக் கூடாது என்பதல்ல—ஒன்றாக இருக்க முடியவில்லை. இந்தியா முழுவதும் நேருவின் ஆட்சியின்கீழ் இருக்கக்கூடாதா என்கி றார்கள்; ஏன், ஆசியாக் கண்டம் நேருவின் ஆட்சியின்கீழ் இருக்கக்கூடாதா? இந்த உலகமே நேருவின் ஆட்சியின்கீழ் இருக்கக்கூடாதா? நம் காலடியில் கிடக்கும் இலங்கை, பக்கத் திலிருக்கும் பர்மா, சயாம், இந்தோ-சீனா போன்ற நாடுகள் இந்தியாவில் ஒன்றாக இருக்கக்கூடாதா? ஏன் அந்த நாடுக ளெல்லாம் தனி நாடாக இருக்கின்றன? நாம் இந்தியாவுடன் ஒன்றாக இருக்க முடியாதென்பதல்ல; இருக்க முடியவில்லை.

"உலகம் எல்லாம் ஒரு குடையின் ஆட்சிக்குட்பட்டு, 'அகில உலகத் தலைவர் நேரு தலைநகரம் அமெரிக்கா; உலகத் தலைவர் குருஷ்சேவ் தலைநகரம் லண்டன்; உலகத் தலைவர் அந்தோணி ஈடன் தலைநகரம் நியூயார்க்' என்று அமைக்கும் போது நாங்கள் திராவிட நாடு கேட்டால் அது குறுகிய நோக்கம்தான்.

"நம் காலடியில் இருக்கும் இலங்கை சுதந்திர நாடாக வாழ்கிறது. தமிழகம்—ஏறத்தாழ 3 கோடி மக்களைக் கொண்ட ஒரு நாடு ஒரு ஆட்சியின்கீழ் வாழவேண்டுமா? சிலோன், அபி சீனியா, மொராக்கோ, சகாரா பாலைவனத்தை ஒட்டிய சின்னஞ் சிறிய நாடுகளெல்லாம் தனிநாடாக வாழும்போது 'திராவிடம்' வாழ முடியாதா? பாண்டுங் மாநாட்டிலே கலந்துள்ள 25 நாடு களில் சின்னஞ்சிறு நாடான லெபனானும் கலந்துகொண்டு ஆசிய வல்லரசுகளுக்குச் சமமான அந்தஸ்தைப் பெறுகிறது. லெபனான் 12½ இலட்சம் மக்கட் தொகையைக் கொண்டது. இங்கு—நம் சென்னை நகரத்தின் மக்கட் தொகை சுமார் 18 இலட்சம். இங்குள்ள ஒரு நகரத்தைவிட சிறிய சுண்டைக்காய் அளவுள்ள நாடு சுதந்திர நாடாக இருக்கிறது. அது வாழு மாம்! 'திராவிடம்' வாழாதாம்!

"'திராவிடம்' என்ற சொல் இலக்கியத்திலே இருக்கிறதா என்றால், இருக்கிறது; தாயுமானவர் பாடலிலே திராவிடத்தைக் காணமுடியும்; பௌத்த காப்பியங்களிலே திராவிடம் இருக் கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாகிய நாம், 'திராவிடம் என்ற சொல் இலக்கியங்களிலே இருக்கிறது; அதனாலே திராவிட நாட்டைக் கொடுங்கள்' என்று கேட்க வில்லை. நாம் தொடுக்கும் வழக்குக்கு இலக்கியங்களை சாட் சிக்கு அழைக்கிறோமே தவிர, சாட்சியங்களுக்காக வழக்குத் தொடரவில்லை. 'திராவிடம் என்ற சொல் இலக்கியங்களிலும் இருக்கிறது' என்று இலக்கியங்களை நமக்கு சாட்சிக்கு அழைக் கிறோமே ஒழிய, அகநானூற்றிலும், புறநானூற்றிலும், தொல் காப்பியத்திலும் திராவிடம் இருக்கிறது என்ற காரணத்தினால் திராவிட நாடு கேட்கவில்லை. ஆகவே, சாட்சியை வைத்துக் கொண்டு வழக்குத் தொடரவில்லை. வழக்குக்கு சாட்சியை அழைக்கிறோம். இந்த நிலைமைகளை நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். நாம், மொழிவழி மாநிலம் பிரிந்து அவை இனவழி ஒன்றுபட்டு வாழ விரும்புகிறோம்."

—என்று, 18—3—56ல், சென்னை 19-வது வட்ட தி.மு கழ-ச் சார்பில் நடைபெற்ற உறுப்பினர் வரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் விளக் கினார். அவரது பேச்சின் முழுவிவரம் 3-ம் பக்கத்தில் வெளியாகி யுள்ளது.

பக்ரா - நங்கல் திட்ட வேலை

70 இலஞ்ச ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டனதாம்

விசாரிக்கக் குழு நியமனம்

பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட் டத்தில், பல கோடி மோசடி செய்யப்பட்டதாகச் செய்தி வந் தது அல்லவா?

அந்தத் திட்டத்தினை ஒட்டிய வேலைகளை நிறைவேற்றுவதில், இலஞ்ச ஊழல் புகார் பற்றி விசாரிக்க ஒரு உயர்தரக் குழு நியமிக்கப்படும் என்று இப் போது, பஞ்சாப் மாநில நீர்ப் பாசன இலாகா மந்திரி ஷேர் சிங் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே 70 ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதா யும் அவர் கூறியுள்ளார்.

10,000 அடி ஆழம் தோண்டும் இயந்திரங்கள்

எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் சாதனங்களை வாங்க வும், அதற்காக, தொழில் நுணுக் கப் பயிற்சி அளிப்பதற்கும் ரூ 45½ இலட்சம் செலவில் திட்டம் வகுப் பதுபற்றி இந்தியா—ருமேனியா இடையே ஒரு ஒப்பந்தம் கைவெ ழுத்தாயிற்று.

வாங்கப்படும் கருவிகள் பூமிக் குள் 10,000 அடி வரை தோண் டக்கூடிய சக்தி வாய்ந்தவையாக்

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 22—3—'56 வியாழன்

தொழிலாளர் துயர் துடைப்பீர்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமுலாகத் துவங்கி மூன்றுண்டுகளுக்குப் பிறகுதான், திட்டத்தின் கர்த்தாக்[illegible]க்கும், அதை அமுல் செய்யும்[illegible]மைச் சரவைகளுக்கும் பு[illegible]து—'திட்டம், வேலையில்லாத[illegible]ண்டாட்டத்தைப் போக்கத் [illegible]ண புரியாது' என்பது!

திட்டம் முழுவதுமாக அமு[illegible] செய்யப்படும் இறுதிக் கட்டத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தால், நாட்டின் நிலை என்னவோ துளியும் மாறியதாகக் காணோம். இந்த உண்மையை மறைக்க, 'நாட்டில் உற்பத்தி—பல பொருள்களும்—பெரும் அளவு பெருகியிருக்கிறது; உணவுப் பண்டங்கள், ஏற்றுமதிக்குத் தேவையான அளவு கூட உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன; மக்களின் சராசரி வருமானமும் அதிகரித்திருக்கிறது' என்று, ஏதோ சில புள்ளிவிவரங்களைக் கொட்டிக்காட்டினார்கள்.

உற்பத்தி பெருகி, மக்கள் வருமானம் அதிகரித்திருக்கிறது என்பதை ஏட்டில் உள்ள புள்ளிவிவரங்களில்தான் காண முடிகிறதே தவிர, நாட்டில் உள்ள மக்களின் வாழ்வில் காண முடியவில்லை.

முதல் திட்டம், கருவாக இருந்த காலத்தில் நாட்டு நிலை எத்தனை அவலமாயிருந்ததோ, அதே அளவு அவல நிலை, திட்டம் உருவாகி அமுல் செய்யப்பட்ட பின்னும் நிலவுகிறது என்பதை, இரண்டாம் திட்டத்தை உருவாக்கியுள்ளவர்கள் மறந்துவிடுவதற்கில்லை.

இரண்டாம் திட்டம், பொதுவாக, வேலையற்றிருப்போருக்கு வேலை வாய்ப்புகளை உண்டுபண்ணித் தருவதையே மூல நோக்கமாகக் கொண்டதென்றும், செல்வப் பெருக்கத்திற்கும் வழி செய்து, மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் பயன்படக்கூடியதாகும்—என்று, பெரிய மனிதர்களால் ஆர்ப்பாட்டமாகப் பேசப்படுகிறது. ஆனால், விளைவுகளைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திட்டங்கள் அடுத்தடுத்துத் திட்டப்பட்டு அமுலாகும் அதே நேரத்தில், திட்டத்தின் மூல நோக்கங்களை நிறைவேற்றி வைக்கும் பெரும் பொறுப்பைச் சுமந்துகொண்டிருக்கும் தொழிலாளர் பெருமக்களின் நலனில் சர்க்கார் சிறிதும் அக்கரை காட்டவில்லை என்பதைப் பல எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சென்னை சட்டசபையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள், காங்கிரசின் சோஷலிச மாதிரி சமூக அமைப்பை நோக்கி நாட்டவரை இழுத்துச் செல்லக்கூடியவை என்று, அமைச்சர்கள் பெருமை பேசுகிறார்கள். ஆனால், சோஷலிச சமூகம் இல்லாவிடினும், 'சோஷலிச மாதிரி சமூக' அமைப்பிலும்கூட ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கான குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளின் அளவு குறித்த புள்ளிவிவரத்தையும் தந்துவிட்டு ஒரு சர்க்கார், அந்தக் குறைந்தபட்ச அளவு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கேனும் போதுமான ஊதியத்தைத் தனது நிர்வாகத்தில் உள்ள ஊழியர்களுக்கு வழங்காமலிருப்பது அநியாயம் என்றுதானே கண்டிக்கப்படும்? இதை ஏனோ சென்னை மந்திரிசபையில் கொலு விற்றிருக்கும் 'ஏழைப் பங்காளர்'கள் கருதக் காணோம்.

சர்க்கார் மருத்துவ மனைத் தொழிலாளர் கூட்டம் ஒன்றில் பேசிய பொதுச்செயலாளர், அந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகளில் நியாயமான வற்றைச் சிறிது சிறிதாக வேனும் நிறைவேற்றிவைக்க வேண்டும் என்று எச்சரித்திருப்பதை, வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப்படும் இந்த நேரத்தில் சென்னை சர்க்கார் உணர்வது அவசியமாகும்.

தொழிலாளர் நலனில் சர்க்கார் காட்டிவரும் அலட்சியம் குறித்து சட்டசபையிலும் பல உறுப்பினர்கள் கண்டனக் குரல் தந்திருக்கின்றனர்.

தொழில் முதலாளிகளின் பாதுகாப்பிற்காக அவர்களின் பின்னேடுகிற சர்க்கார், தாங்களே தொழிலாளரின் நலனுக்கு என்று உருவாக்கியுள்ள சட்டங்களையேனும் கண்டிப்பாக அமுல் செய்ய வேண்டியது, நியாயத்தால் நிர்ப்பந்திக்கப்படும் ஒன்றாகும்.

'சட்டங்கள் இயற்றுவது வெறும் கண் துடைப்பிற்குத் தானே!' என்ற தங்களின் உள் நோக்கத்தை அம்பலமாக்குவனவான சம்பவங்கள் பலப் பலவற்றை நாம் அவ்வப்போது இங்கு சுட்டிக்காட்டியிருக்கிறோம்; இப்போது சட்டசபையிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இனியாகிலும் சர்க்கார், தாங்கள் இயற்றிய சட்டங்களைத் தாங்களே—தங்கள் அதிகாரிகளே அவமதிக்கும் கேவலமான பிற்போக்கு நிலையைக் கைவிட்டு தொழிற்சட்டங்களைக் கண்டிப்பாக அமுல் செய்வதின் மூலம், தொழிலாளர் படும் அவதியை—தொழிலாளருக்கு இழைக்கப்படும் பட்டவர்த்தனமான அநீதியைத் துடைக்க சர்க்கார் முன்வர வேண்டும்; இன்றேல், தொழிலாளர்சமூகத்தில் அமைதியும் நிலவாது; அபிவிருத்திக்கு என்று விளம்பரப்படுத்தப்படும் திட்டங்களும் தரும் என்று எதிர்பார்க்கப்படும் சிறு சிறு நன்மைகளையும் தராது போய்விடும்.

தனையனுடன் பரீட்சை எழுதும் தந்தை!

தனையனுடன் பரீட்சை எழுதும் தந்தை ஒருவர் பற்றி செய்தி கிடைத்திருக்கிறது.

கல்கத்தாவைச் சேர்ந்த ஹூக்ளியில், செராம்பூர் எனும் இடத்தைச் சேர்ந்த செய்லன முகர்ஜி என்ற 58 வயதான ஒருவர் உள்ளூர் ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியர்; அவர் தனது மகனுடன் இந்த ஆண்டு இறுதி வகுப்புப் பரீட்சை எழுதுகிறாராம்!

டுனீசியாவிற்கு சுதந்திரம்

ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று!

டுனீசியாவிற்கு சுதந்திரம் வழங்க, பிரான்சு, தனது தலைநகரில் ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதின் மூலம் ஒப்புதல் அளித்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

உள்நாட்டு விவகாரங்கள் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பு, சுதந்திரமான வெளிவிவகாரக் கொள்கை வகுத்துக் கொள்ளுதல் ஆகியவற்றிற்கான முழு உரிமையும், சுதந்திரத்தின் மூலம் டுனீசிய மக்களுக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தத்தில் பிரெஞ்சு வெளிவிவகார மந்திரி பினே, டுனீசியப் பிரதமர் தகர் பென் அமர் ஆகிய இருவரும் முறையே பிரான்சு, டுனீசியா நாடுகளுக்காகக் கையொப்பமிட்டனர்.

டுனீசியா, பிரான்சு நாட்டின் காலனியாக அடிமைப்படுவதற்கு வழிவகுத்த 1881-ம் ஆண்டு, பார்டோ ஒப்பந்தம் இனியும் இரு நாடுகளின் உறவுகளை நிர்ணயிக்க பயன்படாது என்பதையும் பிரெஞ்சு சர்க்கார் அங்கீகரித்துள்ளனர்.

பாதுகாப்பு, வெளி நாட்டு உறவு போன்ற விவகாரங்களில், இருநாடுகளும் சுதந்திரமாக தனித்தனியாக முடிவுகளை மேற்கொண்டு, ஒருவருக்கொருவர் உதவக்கூடிய வகையில் எதிர்காலத்தில் செயல்படலாம் என்றும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

வைகை நீர்த்தேக்க திட்ட வேலைகள்

பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாம்

சென்னை, மார்ச். 20—
"வைகை நீர்த்தேக்க திட்ட வேலைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது போன்றே அமராவதி நீர்த்தேக்கத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவைகளின் பணிகளும் நல்ல முன்னேற்றமடைந்துள்ளது"
என்று, சென்னை மாநில மராமத்து அமைச்சர் சட்டசபையில் அறிவித்துள்ளார்.
வைகைத் திட்டம் நிறைவேற சுமார் ரூ. 3 கோடி செலவிடப்படுமாம்.

குறைகூறவே தூண்டுமாம்!

பெங்களூர், மார்ச். 20—
"கடவுளையே போலீஸ்காரராக்கி, அவருக்குக் காக்கி உடை தரிக்கச்செய்து கடமை யாற்றுமாறு பணித்தாலும், குறை கூறிக் கொண்டுதான் இருப்பார்கள்"
என்று, மைசூர் உள்நாட்டமைச்சர் சித்த வீரப்பா மைசூர் சட்டசபையில், போலீஸ் மானியம் பற்றிய விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறினாராம்.

'போலீசார் செய்யும் கடமையின் தன்மை குறைகூறத்தான் தூண்டும்' என்றும் அவர் தெரிவித்தாராம்.

தகுதி வாய்ந்தவர்கள் கிடைக்கவில்லையாம்!

சென்னை, மார்ச் 20—
பொது சுகாதார இலாகாவில் சுகாதார அதிகாரி ('ஹெல்த் ஆபீசர்') வேலைக்கு தகுதி வாய்ந்தவர்கள் கிடைப்பது அரிதாகவுள்ளதால், வேலையினின்று ஓய்வு பெற்றவர்களையே மீண்டும் அந்தப் பதவிகளில் நியமிக்க வேண்டி இருப்பதாக சென்னை சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி, சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் துணைப் பொதுச்செயலாளர்

வழக்கு சம்பந்தமாகக் கழகத் தோழர்கள் சந்திப்பு

19—3—56 அன்று பிற்பகல் 2-மணிக்கு தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கள்ளக்குறிச்சி வந்து சேர்ந்தார். கழகத் தோழர்கள் அவரை வரவேற்றுக் கழக அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவ்விடம், கள்ளக்குறிச்சி தி. மு. கழகச் செயலாளர் சங்கரன். துணைச்செயலாளர் வகாப், தோழர் வேலாயுதம், தமிழரசுக் கழக மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் ஜனார்த்தனம், வழக்குத் தொடரப்பட்டுள்ள தோழர்கள் மு. பாண்டியன், மனோகரன் உள்ளிட்ட மற்ற தோழர்கள் பிப். 20—அர்த்தாலின்போது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவ விவரங்களையும், குண்டடிபட்ட தோழர்களின் நிலையையும், சர்க்கார் தொடுத்துள்ள வழக்கின் விவரங்களையும் விளக்கிக் கூறினர். வழக்கு தொடர்ந்து நடைபெறுமாயின் அதற்கான ஏற்பாடுகளைப் பற்றியும் துணைப் பொதுச்செயலாளரிடம் தங்களின் எண்ணங்களைத் தோழர்கள் தெரிவித்தனர்.

இவ்விவரங்களைக் கேட்ட பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்களுக்கு ஆறுதல் கூறியதோடு, சர்க்கார் தொடர்ந்து வழக்கை நடத்துவதாயின் அதற்கான நடவடிக்கைகளை அவசியம் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கும் 25 தோழர்களில் பலர் துணைப் பொதுச்செயலாளரை நேரில் கண்டு பேசினர். அவர்கள் அனைவரும் உற்சாகமாகவும், கொள்கையில் உறுதிப்பாடுடையவர்களாகவும் இருக்கக் கண்டு துணைப் பொதுச்செயலாளர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பின்னர் 20—2—56 அன்று திறந்துவைக்கப்பட்டிருந்தகடையிருக்கும் இடத்தையும் போலீஸ் அதிகாரி துப்பாக்கிப்பிரயோகம் செய்த இடத்தையும், துணைப் பொதுச்செயலாளர், மற்ற தோழர்களுடன் சென்று பார்வையிட்டார்.

அதுசமயம் ஏராளமான தோழர்கள் கூடியிருந்து கூட்டணி முயற்சியில் தங்களுக்குள்ள ஆர்வத்தையும், அக்கரையையும் காட்டினர்
கள்ளக்குறிச்சி சம்பவம் காரணமாக சர்க்காரால் கைதுசெய்யப்பட்டுள்ள தோழர்கள் 25 பேர். (இவர்களில் குண்டடிபட்டவர்கள் இருவர்) இவர்களை 12 பேர் ஒரு குழுவாகவும், 13 பேரை மற்றொரு குழுவாகவும் பிரித்து வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

13 பேர் கொண்ட குழுவில்—தி. மு. கழகத் தோழர்களான சின்னசாமி, காசி, கணேசன், நாராயணன், சின்னத்தம்பி, ரங்கபாஷ்யம், செயராமன், கண்ணன் (குண்டடிபட்டவர்) ஆகியோரும், தமிழரசுக் கழகத் தோழர்கள் பாலு, இராமசாமி, ஆறுமுகம் (குண்டடிபட்டவர்) எக்கட்சியிலும் சேராத கண்ணன், சின்னபையன் ஆக 13 பேர் இவர்களின் வழக்கு 21—3—56 அன்று உளுந்தூர்பேட்டை கோர்ட்டில் விசாரணைக்கு வருமென்று தெரிகிறது. குண்டடிபட்ட இருவர்மீது மட்டும் ஐ பி. சி. 147—332 பிரிவுப்படி வழக்கு தொடரப்பட்டிருக்கிறது, மற்றவர்கள்மீது இன்னும் குற்றப்பத்திரிகை பதிவு செய்யப்படவில்லையென்றும் தெரிகிறது.

2-வது பிரிவினரான 12 பேர் மீது (20—2—56 அர்த்தாலன்று ஒரு ஜவுளிக்கடையின்முன் நின்று பொதுமக்களை அக்கடைக்குப் போகவேண்டாமென்று வேண்டிக் கொண்டும், கடைக்காரரைக் கடையை மூடி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டவர்கள்) இன்னும் குற்றப்பத்திரிகை பதிவுசெய்யப்படவில்லை. இந்த 12 பேரில் தி. மு. கழகத் தோழர்கள் மு. பாண்டியன், இரா. வெங்கடசாமி, த. பழனி தமிழரசுக் கழகத் தோழர்கள் பி. இராமமூர்த்தி, ஆர். கோவிந்தராசன், மனோகரன், ம அங்கமுத்து, இரா ஆளவந்தார், வி. பெரியசாமி, சுகதேவ், வை. முத்துச்சாமி, து. மப்பு ஆகியவர்களாகும் இவர்களின் வழக்கு 26—3—56 அன்று உளுந்தூர் பேட்டை கோர்ட்டில் விசாரணைக்கு வரும் என்று தெரிகிறது.

இவ்விவரங்களைக் கேட்டறிந்த பின்னர் சில மணி நேரம் கழித்த தோழர்களுடன் கலந்து பேசிவிட்டு தோழர்கள் மு. பாண்டியன், நாச்சிமுத்து ஆகியோருடன் மையனூர் பொதுக்கூட்டத்திற்குத் துணைப் பொதுச்செயலாளர் புறப்பட்டுச் சென்றார்.

ஏழை மாணவர் கல்விபெற

சம்பளச் சலுகை

பள்ளிகளின் நஷ்டத்தை சர்க்கார் ஈடுகட்டும்

"ஏழை மாணவர்களுக்குச் சம்பளச் சலுகை தந்ததின் விளைவாக உதவி பெறும் உயர் நிலைப் பள்ளிகள், இழக்கக்கூடிய வருமானத்தை சர்க்கார் சரிக்கட்டித் தரும்.
"1956-57-ம் ஆண்டில், பள்ளிகளுக்கான அந்த நஷ்ட ஈட்டுத் தொகை, முந்திய ஆண்டு, மாணவரிடமிருந்து வசூலிக்கப்பட்ட சம்பள விகிதப்படி தரப்படும்"
என்று சர்க்காரின் சமீபத்திய உத்தரவு கூறுகிறது.

1956-57-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட சம்பள விகிதம், எந்தப் பள்ளியிலாவது குறைவாக இருந்திருக்குமானல் அந்த விகிதப்படியே நஷ்டஈட்டுத் தொகைக் கணக்கிடப்படும். இந்தத் தொகை, பல தவணைகளில் தரப்படும் என்றும் உத்தரவு கூறுகிறது.

மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் தொழிலும்

தேசீய மயமாகும்?

புதுடில்லி, மார்ச் 20—
"ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டு வேலை துவக்கியானதும், மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் போன்ற இதர துறை இன்ஷ்யூரன்ஸ் தொழில்களைத் தேசீய மயமாக்குவது பற்றியும் சர்க்கார் கண்ணோட்டமிடும்,"
என்று நிதி மந்திரி தேஷ்முக், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆனாலும், இப்போது தேசீய மயமாக்கப்பட்டுள்ள ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கால்நடை, பயிர், சுகாதாரம் போன்ற துறைகளுக்கு விஸ்தரிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தாராம்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழில் நிறுவன மசோதா பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு விடப்படுமுன், விவாதத்திற்குப் பதிலளித்த நிதி மந்திரி, கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களையும், தேசிய மயமாக்குவதற்கான காரணங்களையும் விளக்கியிருக்கிறார்

உறுப்பினர் வார விழாவில் பொதுச்செயலாளர் முழக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பொதுச்செயலாளர் இரா, நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது :—

"சரியாக ஒரு திங்களுக்குப் பிறகு உங்களனைவரையும் இம் மாபெரும் கூட்டத்தின் வாயிலாக காணும் வாய்ப்பினைத் தந்தமைக்காக 19-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற திங்கள் 18-ந் தேதிதான் இங்கு, உங்களிடையே பேசினேன்; இம் மாதம் 17-ந் தேதியும் இங்கு பேசுகிறேன். அப்போது அர்த்தாலைப்பற்றி பேசினேன்.

"பொது மக்களாகிய நாம் நம்முடைய வேதனையும்; துயரத்தையும் தெரிவிக்கிறோம். இதை உணராதோருக்கு உணரவைக்க, புரியாதோருக்கு புரியவைக்க, தெரியாதோருக்கு தெரியவைக்க, அறியாதோருக்கு அறியும்படி செய்ய நாம் அர்த்தாலுக்கு முன்னர் பேசினோம்.

"திராவிட முன்னேற்றக் கழகப் பாசறையை வளமாகவும், வலிவுள்ளதாகவும் அமைப்பதற்குத்தான் நண்பர்கள் உறுப்பினர் வாரப் பொதுக்கூட்டத்தை இங்கு கூட்டியுள்ளார்கள்.

"நாட்டிலேயுள்ள ஆற்றல் படையினரும், அறிவுப்படையினரும் இந்நாட்டின் பொருளாதாரத் துறையிலே சேர்ந்து பணியாற்றினால் எவ்வளவு சிறந்த முறையிலிருக்கும்? அத்தகைய ஆற்றலும், அறிவும் படைத்த நெஞ்சுரங் கொண்ட தோழர்கள்தான் தி மு கழகத்தில் சேர்ந்து வருகிறார்கள் நாட்டிலே நமக்கு ஆதரவு பெருகி வருகிறது.

"அலுவலகங்களில், தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தோழர்கள் தமது ஆதரவைத் தருகிறார்கள்; மற்றவர்கள் ஊக்கமும் உணர்வும் கொண்டு ஆதரவு தருகிறார்கள் இப்படி நமக்கு ஆதரவு தருவோரின் தொகை ஏராளம்.

"இதைத் தவிர, வாய்ப்பற்றவர்கள்—வசதியற்றவர்கள் — முடியாதோர்—ஏலாதோர்—அறியாதோர்—தெரியாதோர்— ஊக்கமற்றோர்—உணர்ச்சியற்றோர் — சோற்றுலடித்தப் பிண்டங்கள் தவிர அறிவுப் படையினரும், ஆற்றல் படையினரும் நாட்டின் நலத்திலே அக்கரை கொண்டு பணியாற்றி வருகின்றனர்!

"நூற்றுக்கு நான்கு பேர்கள் அறிவாற்றல் படையினராக இருந்தால், நாட்டிலுள்ள உணராதவர்கள்—தெரியாதவர்கள்— ஏங்கயற்றவர்கள் — வாய்ப்பற்றவர்கள் — கோழைகள் ஆகியோர் நம்பக்கம் வந்துதான் ஆவார்கள்.

"ஒரு கிராமத்திலே மூன்று பேர்கள் நாணயமானவர்களாகவும், நேர்மையாளர்களாகவும், நீதி தவறாதவர்களாகவுமிருந்தால் அக்கிராமத்திலுள்ள மக்கள் அனைவரும் அம்மூவர் என்ன சொல்கிறார்களோ அவர்கள் எந்த வழியைப் பின்பற்றுகிறார்களோ அந்த வழியில்தான் அக்கிராம மக்களும் செல்வார்கள். நேர்மை, நீதி, நியாயம் கொண்ட அந்த மூன்று பெரியவர்கள் எந்தக் கட்சியோ, அந்த கட்சிதான் அக்கிராம மக்களும். அந்த மூன்று பேர்களும் திராவிட முன்னேற்றக் கழகமாக மாறினால் ....? நாட்டிலுள்ள அறிவுப் படையினர்—ஆற்றல் படையினர் தரும் புள்ளி விபரங்கள் நாடாளும் அமைச்சர்களுக்கே கூடத் தெரியாது. எனவே, அந்த அறிவுப் படையினரையும் சேர்க்கவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

"எதிர்காலத்தில் முக்கியப் பொறுப்புகளிலே இருக்கப்போகிறவர்கள் இன்றைய மாணவப் பட்டாளத்திலிருந்துதான் வரப்போகிறார்கள். இன்றையத் திராவிட முன்னேற்றக் கழக மாணவப் பட்டாளத்தினர் வருங் காலத்திலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாகவும், கல்லூரிப் பேராசிரியர்களாகவும் கல்வி யதிகாரிகளாகவும் வந்தால் ....? தி. மு. க-வைச் சேர்ந்த மாணவத் தோழர்கள் கலெக்டராகவும், டி. எஸ். பி-யாகவும் மற்ற முக்கியப் பதவிகளிலே வந்தால்......? இன்றைக்கு சட்டக் கல்லூரியிலேயுள்ள அத்தனை தி மு மாணவர்களும் எதிர்காலத்திலே நீதிபதிகளாக மாறினால்...? இப்போது அந்தந்த இடங்களில் வீற்றிருக்கிற மாணவர் பட்டாளம் உருவாகிக் கொண்டுள்ளது.

"இந்த அறிவாற்றல் படைகளும் சேர்ந்து பாடுபட்டால் நாட்டிற்கு நல்லதொரு நிலை பிறக்கும். சிலர் கேட்கிறார்கள்—'இவர்களிடம் என்ன கொள்கை இருக்கிறது—திட்டம் இருக்கிறது?'—என்று! கேட்பவர்கள் கேட்கட்டும்; கிண்டல் செய்வோர், கேலி பண்ணுவோர் தாராளமாகச் செய்யட்டும்; இவர்கள், 'இல்லை' என்று சொல்லிவிட்டால், இல்லாமலா போய் விடும்? நெருப்புக்கோழி, தன்னை யாராவது பார்த்துவிடப்போகிறார்கள் என்றெண்ணி, தன் தலையை மறைத்துக்கொள்ளுமாம். தலையை மறைத்துக்கொண்டால் உடலே மறைந்துவிட்டதென்ற நினைவு அதற்கு! பூனை தன் கண்ணை மூடினால் பூலோகமே இருண்டுவிடும் என்ற நினைப்பு அதற்கு! அதுபோலத்தான், நம் கொள்கைகளை, கோட்பாடுகளை, இலட்சியங்களை இல்லையென்று அவர்கள் மறுத்துவிட்டால் மறுத்துவிடட்டும். கொள்கையில்லாமலா நாட்டிலே நமக்கு மகத்தான ஆதரவு கிடைக்கிறது? நம்மிடம் திட்டம் இல்லாமலா அறிவுப்படையினரும், ஆற்றல் படையினரும் சேர விரும்புகிறார்கள்? நம்மிடம் இலட்சியம் இல்லாமலா நாம் பேசும் கூட்டத்திற்கு மக்கள் திரண்டு வருகிறார்கள்?

"மாற்றுக் கட்சிக்காரர்கள் சந்திக்கிற மக்களைத்தான் நாமும் சந்திக்கிறோம். அவர்கள் பேசுகிற மக்களிடத்திலேதான் நாமும் பேசுகிறோம். 1950-ல் தி. மு கழகத்தைப்பற்றி மக்கள் என்ன நினைத்தார்கள் — இப்பொழுது என்ன நினைக்கிறார்கள்? 1950-ல் கழகம் இருந்த நிலை என்ன—இப்பொழுதுள்ள நிலை என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்ததா, இல்லையா என்ற கணக்கைப் பார்த்தால் நாம் நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்திருக்கிறோம் என்பதை அறிகிறோம் நமது கருத்துக்கள், சிந்தனையைத் தூண்டும் தன்மை வாய்ந்தது; அர்த்தபுஷ்டி நிறைந்தது. 'இவர்கள் அடுக்கு மொழியிலே பேசி மக்களை மயக்கிவிடுகிறார்கள்' என்கிறார்கள் மாற்றுக் கட்சியினர். 'நொண்டிக் குதிரைக்கு சருக்கினது சாக்கு! அப்படி இருக்கிறது இவர்கள் சொல்கிற போக்கு! நாம் அடுக்குமொழியிலே பேசி மக்களை மயக்குகிறோம் என்றால், ஏன் இவர்களும் பேசுவதுதானே? அடுக்கு மொழியில் பேசுகிறோமென்றால் அது அறிவாற்றலின் விளைவு! நாங்கள் பேசும் அடுக்கு மொழியைவிட தேவாரப் பாடல்களிலே நிறைய இருக்கிறதே! அடுக்கு மொழியுடன்கூடிய இவ்வளவு உருக்கு உருக்கென்று மனதை உருக்கக் கூடிய பாடல்கள் வேறு எந்த மொழியிலும், பாடலிலும் கிடையாதே! அடுக்கு மொழியிலும், வர்ணனை வார்த்தைகளிலும் மக்கள் மயங்குகிறார்கள் என்றால், தேவாரம் பாடக்கூடிய பஜனைக்கூடங்களுக்கல்லவா செல்ல வேண்டும்? வர்ணிப்பதிலும், அடுக்கடுக்காய்ப் பேசுவதிலும், பாடுவதிலும் உங்களைவிடவா நாங்கள் அடுக்கு மொழியில் மிஞ்சுகிறோம்?

"நாம் சரித்திரச் சான்றுகளை ஆயிரக்கணக்கிலே காட்டி கேட்டிருக்கிறோம்—'எப்போது இந்தியா ஒரே நாடாக இருந்தது?'—என்று. அதற்குப் பதில் சொல்ல முடியாதவர்கள் 'திராவிடம்' என்ற சொல் இலக்கியத்தில் இருக்கிறதா? அது தமிழ் சொல்லா?—என்கிறார்கள். நான் கேட்கிறேன்—'கம்யூனிஸ்டு' என்பது தமிழ் சொல்லா? அது அகநானூற்றிலே ஐந்து தடவையும், தொல்காப்பியத்திலே எட்டு தடவையுமா வருகிறது? 'காங்கிரஸ்' என்பது ஆங்கிலச் சொல். 'காங்கிரஸ்' என்றால் 'கூட்டம்' என்று பொருள். 'கம்யூனிஸ்டு, காங்கிரஸ்' என்ற சொற்களை இலக்கியங்களிலே காண்பதைவிட, 'திராவிடம்' என்ற சொற்களைக் காண்கிறோம். 'இந்தியா' என்ற சொல் கந்தபுராணத்திலாவது வந்திருக்கிறதா? அவர்கள் வைத்திருக்கிற ருக்கு வேதம், யஜுர் வேதம், சாமவேதம் அதர்வண வேதம், இராமாயணம், பாரதம், திருவிளையாடற் புராணம், சிவபுராணம், தலபுராணம், கந்தபுராணம், பகவத் கீதை ஆகியவற்றிலாவது 'இந்தியா' என்ற சொல் வருகிறதா?

"தமிழகத்துடன் சேரவேண்டிய பகுதிகளான தேவிகுளம்—பீர்மேடு, நெய்யாற்றங்கரை, செங்கோட்டை, கொச்சின்—சித்தூர், புத்தூர் போன்ற பகுதிகள் தமிழ் நாட்டோடு சேர வேண்டுமென்று பல மேடைகளிலே சொன்னோம்; கூட்டணியும் அமைத்துக் கேட்டோம்; காங்கிரசுக்காரர்களும் கேட்டார்கள்; சட்டசபை உறுப்பினர் தீர்மானம் நிறைவேற்றிக் கேட்டார்கள். ஜனவரி மாதம் 23-ம் தேதி வரையில் மொழி வழி மாநிலப்படி தமிழகப் பகுதிகள் சேர்க்கப் படவேண்டும் என்று கேட்ட காங்கிரசுக்காரர்களின் நாக்கு ஜனவரி 25-ந் தேதி விழுந்துவிட்டது; 'அந்தப் பகுதிகள் வேண்டாம்' என்று சொல்லிவிட்டார்கள். தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களின் நாக்கு 1951ம் ஆண்டில் கேட்டது; 1952-ம் ஆண்டில் கேட்டது; 1953-ம் ஆண்டில் கேட்டது; 1954-ம் ஆண்டில் கேட்டது; 1955-ம் ஆண்டில் கேட்டது; சட்டசபையில் சுப்பிரமணியத்தின் நாக்கு கேட்டது; பக்தவத்சலத்தின் நாக்கு கேட்டது; 1956 ஜனவரி 25-ந் தேதி அந்த நாக்குகள் விழுந்துவிட்டது. 'அது வேண்டாம்; அந்தப் பகுதிகள் போனாலென்ன, இருந்தாலென்ன?' என்று கூறினார்கள். எனவே, தோழர்களே நாக்குப் புரளும் இவர்களுக்கு அமைச்சர்களாயிருக்க என்ன தகுதி இருக்கிறது?

"சர்வ கட்சிக் கூட்டணி திடீரென்று அமைந்து விடவில்லை. நமது கோரிக்கைகளை டில்லிக்கு எடுத்துச் சென்ற மந்திரிகள் கையை விரித்துக் கொண்டு வந்த பிறகுதான்—நேருவின் தீர்ப்புக்குப் பிறகுதான் கூட்டணி அமைந்தது. மந்திரி. சுப்பிரமணியம் சொல்கிறார் — 'நேருவே சொல்லிவிட்ட பிறகு நாம் எப்படி கேட்பது? அவரே.......சொல்லிவிட்டாரே!' என்கிறார்.

"'இவள் என் மனைவிதான்; நான் தாலி கட்டியவன்தான்; எனக்கு உரிமையானவள்தான்; எனக்குச் சொந்தமானவள்தான்; ஆனாலும் அதோ, அந்த பெரியவரே .... கேட்கும்போது நான் அனுப்பாமல் இருக்க முடியுமா? கொஞ்ச நாளைக்கு அவருடன் அவள் போகட்டும்'—என்று மானங்கெட்டவன் ஒருவன் சொன்னால், அவனை எந்த ரகத்தில் சேர்ப்போமோ, அதிலே சேர்க்கப்பட வேண்டியவர்தான் சுப்பிரமணியமும்!

"தமிழகத்தின் வரலாற்றில் எத்தனையோ அர்த்தால் நடைபெற்றிருக்கிறது. ஆனாலும் பிப். 20 அர்த்தால் போன்று ஒரு அர்த்தால் இதுவரை நடந்தேறியதில்லை! காந்தியார் இறந்த பிறகு ஒரு அர்த்தால் பெரிய அளவிலே நடந்திருக்கிறது, காந்தியாரின் பேரால், அகிம்சையின் பேரால், உத்தமரின் பேரால் நடைபெற்ற அர்த்தாலில் எவ்வளவு அமளி நிகழ்ந்தது என்பதையும், இந்த பிப். 20 அர்த்தாலில் எவ்வளவு அமைதி நிலவியது என்பதையும் கணக்குப் போட்டுப் பாருங்கள். கோவா அர்த்தால்கூட நாடெங்குமுள்ள எல்லா இடங்களிலும் நடைபெறவில்லை! நேர்மையும், நாணயமும் கொண்ட அருமைக் காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன்—'அந்த அர்த்தால்களின் விளைவுகளையும், இந்த அர்த்தாலின் விளைவுகளையும் கணக்குப் பாருங்கள்'—என்று!

"'அர்த்தால் வெற்றிபெற்றதா, இல்லையா?'—என்று சட்டசபையில் உறுப்பினர்கள் கேட்டதற்கு, 'வெற்றி எனச் சிலர் சொல்லிக்கொள்கிறார்கள்; சிலர் தோல்வி எனச் சொல்லிக்கொள்கிறார்கள்' என்று அமைச்சர் சுப்பிரமணியம், ஒன்றும் தெரியாதவர்போல பதில் கூறியிருக்கிறார். இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் அர்த்தாலைப் பற்றி தெரியாதிருக்க? நேரே ஆப்பிரிக்காவிலிருந்து வந்து குதித்தாரா? பாரிசிலிருந்து விமானத்திலிருந்து இறங்கிவந்தாரா?

"அந்தக்காலத்து இராஜ தர்பாரிலே அரசன், மந்திரியைப் பார்த்து கேட்பானும்—'மந்திரி, நம் தேசத்தில் மாதம் மும்மாரி பெய்கிறதா?' என்று! மழை பெய்வதுகூடத் தெரியாத மண்டூக அரசன் அவன். அந்த அரசனைப்போல கூறுகிறார், அமைச்சர் சுப்பிரமணியம்—'அர்த்தால் வெற்றி எனச் சிலர் சொல்கிறார்கள்; தோல்வி எனச் சிலர் சொல்கிறார்கள்' என்று! இவருக்கு எதுவுமே தெரியாதாம்!

"சிரித்துக் கூறுவதையே தன் தொழிலாகக்கொண்ட 'தினமணி'யும், 'மெயில்' என்ற ஆங்கில இதழும் 'காலிகளும், கூலிகளும் வருவார்களென்று பயந்துக்கொண்டு வியாபாரிகள் கடையடைத்தார்கள்' எழுதியிருக்கிறது.

"காந்தியார் இறந்த பிறகு நடைபெற்ற அர்த்தாலின் போது, கோவா அர்த்தாலின்போது, 'காலிகளும், கூலிகளும் வருவார்கள் என்று பயந்துகொண்டு கடை அடைத்தார்கள்' என்று ஏன் எழுதவில்லை! இந்த அர்த்தாலுக்கு மட்டும் இப்படி எழுத வேண்டிய காரணமென்ன? 'உங்கள் பேனாவிலே மைதான் ஊற்றுகிறீர்களா, அல்லது சாக்கடை நீரைத்தான் ஊற்றி வைக்கிறீர்களா?' என்ற சந்தேகத்திற்கு ஏன் இடமளிக்கிறீர்கள்?

"காலிகளுக்கும், கூலிகளுக்கும் பயந்துகொண்டு கடைகளை அடைத்தார்களாம்; அர்த்தாலில் கலந்துகொண்டவர்கள் காலிகளும், கூலிகளுமானால் அடைக்கப்பட்ட கடைகளின் பூட்டுக்களை உடைக்க எண்ணினால் எவ்வளவு நேரம் ஆகும்? எவ்வளவு பெரிய பூட்டு போட்டு விடப்பட்டிருந்தது, வந்த கூட்டத்திற்கு அந்தப் பூட்டு எம்மாத்திரம்?

"நாம் கணக்குப் போடு

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தியா இந்துக்களின் நாடுதானே'

'ஏன் 'இந்து ராஜ்யம்' எனப் பிரகடனம் செய்யலாகாது?'

இந்து மத வெறி இயக்கத் தலைவர் கேள்வி

பாட்னா, மார்ச் 20—இந்தியாவை ஒரு 'இந்து ராஜ்யம்'—'இந்து ராஷ்டிரம்' என்று அழைக்க வேண்டுமாம்!

'இந்துக்களின் ராஜ்யம்தான் இந்தியா' என்று பிரகடனம் செய்ய வேண்டுமாம்!

இந்து மதத் தலைவர் ராஷ்ட்ரீய சுயம் சேவா சங்கத் தலைவர் கோல்வால்கர்தான் இப்படிக் கருத்தறிவித்திருக்கிறார்!

தேசியப் புனர் நிர்மாணத்திற்காக, இந்தியாவை 'இந்து ராஜ்யம்' எனப் பிரகடனம் செய்ய வேண்டுமென அவர் காரணம் காட்டிப் பேசினாராம்!

"உண்மையில், இந்தியா, ஒரு இந்துக்களின் நாடுதான்; அப்படியிருக்கும்போது, ஏன் இதை முறையாக அங்கீகாரம் செய்யக் கூடாது?' என்று அவர் கேட்டாராம்.

அவரது இந்தக் கேள்வி, 'இந்தியா ஒரு மதச்சார்பற்ற தேசம்', என்று வெகுவாக பிரஸ்தாபிக்கப் ப[illegible] கூற்றினைப் பொய்ப்பிக்[illegible]—பெரிய மனிதர்களின் '[illegible]தவ'ப் போர்வையைக் [illegible]த்தெறிகிறது — என்று, [illegible]ால்வால்கர் பேச்சைக் கேட்டவர் கூறுகின்றனராம்!

'வெள்ளை அறிக்கை' வெளிவருகிறது

சென்னை, மார்ச். 20—கல்வியைப் பற்றிய 'வெள்ளை அறிக்கை'யை சென்னை சர்க்கார் இறுதியாக நிறைவேற்றியுள்ளனராம். ஆரம்பக் கல்வி சீரமைப்பு, 'செகண்டரி' கல்வி சீரமைப்பு, பல்கலைக் கழக பூர்வாங்கப் படிப்பு ஆகியவைகள் இவ்வெள்ளை அறிக்கையில் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

அணுவை ஆராய்ச்சி செய்யும் இயந்திரம்

பிரமாதமான சக்தி வாய்ந்ததாம்; ரஷ்யா நிர்மாணிக்கிறதாம்!

அணுவின் உட்கரு (நியூக்ளியஸ்) பற்றிய ஆராய்ச்சி நடத்துவதற்கென ரஷ்யா மிகப் பெரிய இயந்திரமொன்றை நிர்மாணித்து வருகிறதாம்.

இந்த இயந்திரம் 1,000 கோடி 'வோல்ட்' சக்தி பெற்றதென்றும், மின்வேகத்தில் அணுக்கதிரியக்கம் உற்பத்தி செய்யக்கூடியதென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த இயந்திரத்திலுண்டாகும் அணுக்கதிரியக்கம் மிக மிக ஆபத்தாதலால் தூரத்திலிருந்தே அது இயக்கப்படுமாம்!

இந்திய அரசாங்க அலட்சிய எதிரொலி

நியாயமான சலுகை இல்லை; உரிய பங்கைத் தரவும் மனமில்லை; இவைகளை மன்னித்து மறந்துவிடலாம் என்று லும், பலவித நெருக்கடிகளுக்கு இடையில் ஒரு உயர்ந்த குடிசைத் தொழிலாக வளர்ந்துள்ள தமிழ் நாட்டுத் தீப்பெட்டித் தொழிலுக்கும் இந்தியப் பேரரசு சூழ்ந்துவரும் கேடு, அதன் ஓரவஞ்சனையை மன்னித்து மறக்கச் செய்யக்கூடியதாக இல்லை.

சாத்தூர், சிவகாசி, கோயில்பட்டி, திண்டுக்கல், சிதம்பரம் போன்ற பகுதிகளில் ஏழை மக்கள் பல்லாயிர வருக்குக் குறிப்பாகப் பெண்களுக்கு வயிற்றுப் பிழைப்பு அளித்துவரும் தீப்பெட்டித் தொழிலுக்கு ஒரேயடியாகக் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய அவல நிலை இப்பொழுது ஏற்பட்டு இருக்கிறது. இந்தியப் பேரரசின் அக்கறையின்மையும் அலட்சியமுமே இந்த அலங்கோலத்திற்குக் காரணமாகும்.

சாத்தூர், சிவகாசி, கோயில்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தீப்பெட்டி உற்பத்திச் சாலைகளை மூடிவிடும் கருத்து அதன் உற்பத்தியாளர்களிடைப் பரவலாக இருக்கிறது.

கோவில்பட்டியில் மிகப் பெரிய தொழிற்சாலையான மீனுட்சி தீப்பெட்டி உற்பத்திச்சாலையிலும், மற்றும் இரு தொழிற்சாலைகளிலும் அறிவிப்புப் பலகைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. மார்ச் 26-ம் தேதியிலிருந்து மூடிவிடப் போவதாக அப்பலகைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நட்டத்திற்கு சரக்குகள் விற்பனையாவதும், அதனுல் சரக்குகள் தேங்கிக் கிடப்பதுமே இத்தொழிற்சாலைகள் மூடப்படுவதற்குக்காரணமாகக்கூறப்பட்டு வருகிறது.

அரசியலார் மூலம் வியாபார விற்பனை நிலையம் ஏற்படுத்தச் செய்ய சென்னை முதல் அமைச்சர் காமராசர், அமைச்சர் பக்தவத்சலம், மத்திய அரசாங்கத் தொழில் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஆகியோரைத் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கம் பேட்டிகண்டு எடுத்துக் கூறியது.

இந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசியலாரே உற்பத்தியாளர்களிடம் வற்புறுத்திச் சொன்னுர்கள். திட்டத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு உண்டு என்று கூறப்பட்டிருந்தது. உற்பத்தியாளர் சங்கம் யாதொரு முடிவும் அறிவிக்காமலிருந்தது.

தற்போது தீப்பெட்டி விற்பனையில் நட்டம் ஏற்பட்டு வருகிறது. இப்பகுதியிலிருந்து 1,500 மைல்களுக்கு அப்பாலும் குரோசு ஒன்று ரூ. 3—5—0 விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இதில் இரண்டு ரூபாய் கலால் இலாகா வரியாகவும், இரயில்வே இன்சூரன்சு, பாங்க் கமிசன் ஆகியவைகளுக்கு 0—4—6 செலவும் ஏற்படுகிறது. ஆகவே அரசியலார் கொடுக்கும் 'ரிபேட்' போக குரோசு ஒன்றுக்கு நான்கு அணு வீதம் நட்டம் உண்டாகிறது. வேறு மாறுதல் உண்டாகும் வரை இந்த நிலைமையை உற்பத்தியாளர்கள் சமாளிப்பது என்பது இயலாததே.

ஒரே விலையில் விற்பதைப் பற்றிக் கட்டுப்பாடு செய்து தங்களுக்குள் போட்டி மனப்பான்மையை ஒழித்துக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி ஆலோசனை செய்ய இறுதி முயற்சியாக 25-ம் தேதி உற்பத்தியாளர் சங்கத்தை அதன் தலைவர் கூட்டியிருக்கிறார். சென்ற மாதம் கூடிய பொதுஅவைக் கூட்டத்தில் தொழிற்சாலைகளை சில வாரங்களுக்கு மூடிவைக்கும் தீர்மானம் பற்றிக் கடுமையான விவாதம் நடைபெற்றது; எவ்விதத் தீர்மானமும் நிறைவேறுமல் அக் கூட்டம் கலைந்தது.

இப்பகுதியில் சுமார் 75,000 மக்கள் இத்தொழில் காரணமாக வாழ்கிறார்கள். நாள் ஒன்றுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் மத்திய அரசாங்கத்திற்கு வரி மூலம் வருமானம் கிடைக்கிறது. பல உப தொழில்களும், தீப்பெட்டித் தொழில் மூலமாக ஏற்பட்டிருக்கின்றன. எவ்வித முடிவும் ஏற்படாமல் தொழிற்சாலைகள் மூடப்பட்டால் மோசமான சூழ்நிலை ஏற்படலாம்.

பனங்காட்டு நரியாம்!

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

'புரட்சி' என்று சுவற்றிலே எழுதினுல் புரட்சி ஏற்பட்டு விடுமா? 'போராட்டம்' என்கிறுர்கள்— போராட்டத்தைக் கண்டு நான் அஞ்சுபவனல்ல; நான் 35 ஆண்டுகள் போராட்டம் நடத்தியவன். இவர்கள் ஒரு நாள் போராட்டம் நடத்திவிட்டு, 'வெற்றி—வெற்றி' என்று கூச்சல் போடுகிறார்கள். இவைகள் அவசியமில்லாதவை; இல்லாவிட்டால், நானே முன்நின்று நடத்துவேன்," என்று, முதலமைச்சர் காமராசர், அதே திறப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதேசம் வழியாகப் பறந்து வருவதற்கு மவுண்ட்பாட்டன் பிரபுவுக்கு பாகிஸ்தான் சர்க்கார் அனுமதி மறுத்துவிட்டதாக அதிகாரபூர்வமாகத் தெரிய வருகிறது.

மாநில மாநாட்டு ஆலோசனைக் கூட்டம்

★

"24—3—55 மாலை 3 மணியளவில், திருச்சி மாநில மாநாட்டு அலுவலகத்தில் (எண் 9, கில்லேதார் தெரு, திருச்சி) மாநில மாநாட்டு ஆலோசனைக்கூட்டம் நடைபெறும். அதுபோது, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், மாநாடு ஆக்க வேலைகள் குறித்து விளக்கவுரையாற்றுவார். ஆகவே, திருச்சி மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகளும், செயலாளர்களும் வருகை தரவேண்டுகிறேன்,"

என்று, திருச்சி மாவட்டத் தி. மு கழகச் செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் அறிவிக்கிறுர்.

இரா. சு. தங்கப்பழம்

சுற்றுப்பயணம்

மார்ச் 23 : கோலார் தங்கவயல்
24 : பெங்களூர்
25 : மைசூர்

நாஞ்சில்மாவட்டதி.மு.க.பொதுக்கூட்டங்கள்

★

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கி. மனோகரன், வி. எம். ஜான் ஆகியோர் கீழ்க்கண்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டங்களில் பேசுவார்கள் :—

ஏப்ரல் 6 : நாகர்கோவில்
7 : இரவிபுதூர்
8 : மார்த்தாண்டம்

தோழர்கள் டி. கே. சீனிவாசன், கி. மனோகரன், வி. எம். ஜான் ஆகியோர் கீழ்க்கண்ட தி. மு. கழக பொதுக்கூட்டங்களில் பேசுவர்:—

ஏப்ரல் 12 : கன்னியாகுமரி
13 : கோட்டாறு
14 : குளச்சல்

நன்னிலம் வட்டச் செயற் குழுக் கூட்டம்

24—3—56 காலை 10 மணிக்கு, குடவாசல் கீழவீதியில், தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி இல்லத்தில் நடைபெறும். அதுபோது, பொதுச்செயலாளர் வருகை பற்றி ஆலோசிக்கப்படும்.

பொதுச்செயலாளர் இலட்சியப் பரணி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வதெல்லாம் நடைபெற்ற அர்த்தாலுக்குப் பிறகு, மக்களின் உள்ளத்தில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டது என்பதுதான். இந்த அர்த்தாலில் மக்களுக்கு விருப்பம் இருந்தது என்பதைத் தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(அவரது பேச்சு முடியவில்லை; தொடர்ந்து நாளை வெளிவரும்)

★

நிகழ்ச்சிகள்

18—3—56 இரவு 7 மணிக்கு, சென்னை திரு. வி. க. திடலில் (கான்ரான்ஸ்மித் நகர்) 19-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் வாரப் பொதுக்கூட்டம் தோழர் டி. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் பி. ஜி. இராதாமாணிக்கம் கழகப் பண் பாடினுர்.

தோழர்கள் கதிர்—சுப்பிரமணியம், இளம்பரிதி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. ஆகியோர் பேசினர்.

பின்னர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தி மு. கழகத்தின் இலட்சியங்களையும், பிப்.20 அர்த்தால் பற்றியும், இன்றுள்ள அரசியல் நிலைமையைப் பற்றியும் அரியதோர் விளக்கவுரையாற்றினர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு, பொதுச்செயலாளரின் கருத்துரையால் விளக்கம் பெற்றனர்.

வேலூர்—சேலம் தோழர்கள் மீது வழக்கு

பிப். 20—அர்த்தாலை ஒட்டிக் கைது செய்யப்பட்ட வேலூர்—சேலத்தைச் சேர்ந்த 14 தோழர்களுக்கு பரமத்தி நீதிபதி அனுப்பியிருந்த 'சம்மன்'படி அந்தத் தோழர்கள் 20-3-56ல் பரமத்தி நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

தோழர்களுக்காகக் கூட்டணியின் சார்பில் வழக்கறிஞர் தோழர் வி. காளியப்பன் அவர்கள் வந்திருந்தார்.

மாஜிஸ்திரேட் வழக்கை மீண்டும் 27—3—56-ந் தேதிக்கு தள்ளிப்போடப்பட்டிருக்கிறுர் என்று அறிவிக்கப்படுகிறது.

கண்ணமங்கலம் தோழர்கட்கு 'சம்மன்'

பிப். 20—அர்த்தால் சம்பந்தமாகக் கண்ணமங்கலம் தோழர்களை 23—3—56ல், ஆரணி 'சப்—மாஜிஸ்திரேட் கோர்ட்'டுக்கு வரும்படி மாஜிஸ்திரேட் சம்மன் அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகிறது.

தலைமை நிலையச் செய்தி :

மாநில மாநாடு

பந்தல் அமைப்பு — 'ஸ்டால்' ஏற்பாடுகள்

மே—17, 18, 19, 20 ஆகிய தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டுக்கான பந்தல் அமைத்தல், 'ஸ்டால்'களை வாடகைக்கு விடுதல் ஆகிய ஏற்பாடுகளைக் கவனித்து ஆவன செய்ய. மார்ச் 31, ஏப்ரல் 1, 2 ஆகிய தேதிகளில், அன்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணை பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் திருச்சியில் தங்கியிருந்து, வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில்-தர்மலிங்கம், செயலாளர் எம். எஸ். மணி, எஸ். முத்து உள்ளிட்ட மற்ற நிர்வாகிகளுடன் கலந்து முடிவு செய்வார்கள்.

ஏப்ரல் 1-ந் தேதி—பந்தல் அமைப்பது பற்றியும், 2-ந் தேதி—ஸ்டால்கள் வாடகைக்கு விடுவது பற்றியும் முடிவு செய்துவிடப்படும்.

எனவே, பந்தல் அமைக்க விரும்புவோரும், ஸ்டால்கள் வாடகைக்கு வேண்டுவோரும், முன்னதாகவே வரவேற்புத் தலைவர் அன்பில்-தர்மலிங்கம் அவர்களுடன் (9, கில்லேதார் தெரு, தெப்பக்குளம், திருச்சி) தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

'இலட்சிய அடிப்படை' உள்ளது காங்கிரஸ் கட்சியாம்!

யாருக்கு யார் அடங்கி நடப்பது என்ற அதிகாரப் போட்டி!

நகரசபைக்கட்சியை கலைத்துவிடும்படி சிபாரிசு

மதுரை காங்கிரஸ்கட்சியினருக்குள் கோஷ்டிச்சண்டை

குறிப்பிட்ட சில இன்றியமையாக் கோரிக்கைகளுக்காக, அதுவும் காங்கிரஸ் கட்சியால் உருவாக்கப்பட்டதும் வற்புறுத்தப்பட்டு வந்ததுமான கோரிக்கைகளுக்காக, உருவாக்கப்பட்டுள்ள சர்வ கட்சிக் கூட்டணியைக் குறித்து 'இலட்சிய அடிப்படை இல்லாதது; அடிசறிந்து போவது நிச்சயம்' எனத் தன் விழைவை ஆருடமாகக் கூறிவருகிறார் முதலமைச்சர். ஆனால், 'இலட்சிய அடிப்படை' இருப்பதாகக் கூறப்படுவதும், முதலமைச்சரைத் தலைவராகக்கொண்டதுமான காங்கிரஸ் கட்சி, செப்பனிட முடியாத வகையில் பழுதுபட்டுக் கிடப்பதுடனில்லாது பெருவேகமாகத் தேய்ந்துகொண்டும் வருகிறது, உருவத்தில்! இதோ, மதுரை எடுத்துக்காட்டுகிறது, காங்கிரஸ் கட்சியைப் பற்றியுள்ள தொழு நோயை!

மதுரை நகரசபைக் காங்கிரசுக் கட்சியைக் கலைத்துவிட வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரசுக் குழுவுக்கு சிபாரிசு செய்துள்ள தீர்மானம் ஒன்று மதுரை நகர் மாவட்டக் காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்தீர்மானம் தமிழ்நாடு காங்கிரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நகரசபைத் தலைவர் தேர்தல், நியமனக் குழு, காண்ட்ராக்ட் குழு ஆகிய இடங்களுக்கு இரு உறுப்பினர்கள் தேர்தல் ஆகியவற்றில் மதுரை நகரசபைக் காங்கிரசுக் கட்சியின் முடிவுக்கு விரோதமாக சில காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாக்களித்ததுடன், காங்கிரசுக்குத் துரோகம் செய்தவிட்டதின் விளைவாக இத்தீர்மானம் மதுரை நகர மாவட்டக் காங்கிரசுச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நகரசபைக் காங்கிரசுக் கட்சி, காங்கிரசு ஊழியர்கள் ஆகியோர்களிடையே ஏற்பட்டுள்ள சிக்கல்களை விசாரணை செய்வதற்குத் தமிழ்நாடு காங்கிரசுக் குழுவினரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர், தங்கள் அறிக்கையை தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிடம் அளித்துள்ளதாகவும், இம்மாதம் 24-ம் தேதியன்று நடைபெறவிருக்கும் தமிழ்நாடு காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்தில் அந்த அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிகிறது.

மதுரை நகரசபைக் காங்கிரசுக் கட்சியைக் கலைத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் மதுரை நகர் மாவட்டக் காங்கிரசுக் குழுவின் சிபாரிசு தீர்மானமும் 24-ந் தேதி பரிசீலனை செய்யப்படும் என்று நம்பகமாகத் தெரிகிறது.

பட்டம் தானுவிற்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி சபை அமைக்கப் போதுமான பலம் பட்டத்திற்கு சந்தேகமில்லாமல் இருக்கிறது என்று, திரு—கொச்சி கம்யூனிஸ்டுத் தலைவரான டி. வி. தாமஸ் தெரிவித்திருக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை—1, எண் 17, சாலை விநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் ஆனைமுத்து தலைமையில், 'நாடும் ஏடும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர். குறிப்பு: தேதி குறிப்பிடப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.